முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 9/2019

இன்று 2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கற்பகம் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : மகாலிங்கம் | கிராமம் | : வெள்ளாண்டிபாளையம் |
| வயது | : | தாலூக்கா | : அவினாசி |
| நாள் | : 19-08-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

முதல் விசாரணை தொடர்ச்சி:

நான் வழக்கின் பிரதிவாதியாவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.எஸ்ஸி., கெமிஸ்ட்ரி படித்துள்ளேன். எந்த வருடத்தில் திருமணமானது என்றால் 26.10.1995 ம் தேதி நடந்தது. எனக்கு திருமணமானதில் இருந்து எங்கு வசித்து வருகிறேன் என்றால் முதல் விசாரணை வாக்குமூலத்தில் கண்ட முகவரியில் தான் வசித்து வருகிறேன். என் பெற்றோர் வீடு எங்குள்ளது என்றால் 15 வேலம்பாளையம், பெரியார் காலனியில் உள்ளது. நான் பிறந்தது முதல் அந்த முகவரியில் தான் வசித்து வருகிறேனா என்றால் ஆமாம்.

2) என் தாத்தா, பாட்டி வீடு தாவா முகவரியின் அருகில் உள்ளது என்றால் க.ச.எண்.453 ன் கிழபுறம் உள்ளது. க.ச.எண்.453, 254 ல் வடபுற எல்லையில் தடம் உள்ளதா என்றால் உள்ளது. என் தாத்தா, பாட்டி வீடு எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் கடந்த 90 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளது. என் முப்பாட்டனார் பெயர் கருப்ப கவுண்டர். அவருடைய வாரிசுகள் எத்தனை பேர் என்றால் 3 பேர்கள். வேலப்ப

கவுண்டர், குழந்தை கவுண்டர், வெங்கடாசல கவுண்டர் ஆகியோர். என் அப்பாவின் அப்பா பெயர் என்ன என்றால் பழனிச்சாமி கவுண்டர், பழனிச்சாமி கவுண்டரின் அப்பா பெயர் குழந்தை கவுண்டர் ஆகும்.

3) தாவாவில் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வா.சா.ஆ.11 ஆவணத்தில் க.ச.எண்.254 காலைக்கான பட்டாவில் ராமசாமி கவுண்டர் மூத்த மகனும் குடும்பத் தலைவருமான ராமசாமி கவுண்டன் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தில் க.ச.எண்.253 காலைக்கான பட்டாவிலும் ராமசாமி கவுண்டர் மூத்த மகனும் குடும்பத் தலைவருமான ராமசாமி கவுண்டன் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். கருப்ப கவுண்டருக்கு ராமசாமி கவுண்டர் என்ற மகன் இருந்தார் என்றால் சரிதான்.

4) நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துப் பார்த்து கையெழுத்து செய்தேனா என்றால் ஆமாம். எதிர்வழக்குரையில் கருப்ப கவுண்டருக்கு 3 மகன்கள் இருப்பதாக கண்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 1926ம் ஆண்டு வேலாயுத கவுண்டர், குழந்தை கவுண்டர், வெங்கடாசல கவுண்டர் ஆகிய மூவரும் பாகம் பிரித்துக் கொண்டனர் என்றால் சரிதான். பாகம் செய்து கொண்ட சொத்துக்கள் கருப்ப கவுண்டரின் பூர்வீகச் சொத்துக்கள் என்றால் சரிதான். பூர்வீகச் சொத்து என்பதால் கருப்ப கவுண்டரின் மூத்த மகன் ராமசாமி கவுண்டருக்கும் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி சொத்துக்கள் எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

5) என் சகோதரிகளுக்கும் செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி சொத்துக்கள் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொத்துக்கள் என் தகப்பனாருக்கு எவ்வாறு பாத்தியம் என்ற விவரமும், மூல பத்திரங்களின் விவரமும் கண்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். சொத்து சம்பந்தமாக என் அப்பா பெயரில் ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. என் அப்பா பெயரில் நில உரிமை பதிவேடு இருந்தது. அதன் அடிப்படையில் எங்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

6) என் அப்பா உடன் பிறந்தவர்களும் அவரது வாரிசுகளும் நில உரிமை பதிவேட்டின்படி சொத்துக்களை எழுதிக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. பத்திரத்தை வைத்து எழுதிக் கொண்டார்கள். வா.சா.ஆ.8 ஆவணத்தில் மூல பத்திரங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. க.ச.எண்.253 க்கும் 454 க்கும் என் அப்பா பெயரிலோ, என் பெயரிலோ பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான். அந்த சொத்துக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை.

7) க.ச.எண்.254/6 ல் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். அதற்கு மேல்புறம் என் சகோதரி கவிதாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தும், அதற்கு வடபுறம் என் சகோதரி சித்ராவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தும் உள்ளது என்றால் சரிதான். என் சகோதரி கவிதாவின் சொத்துக்கு முன்புறம் மெயின்ரோடு உள்ளது என்றால் சரிதான். என் அப்பா சொத்துக்களை பிரித்துக் கொடுப்பதற்கு முன்பு மெயின்ரோட்டில் இருந்து எங்கள் சொத்துக்கு செல்லலாம் என்றால் சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக தாவா ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-A.Vanitha
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.